(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 366.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 யூன் 04, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2562/ '12

1\.

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்வேறான உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் கிடைக்கும் சம்பளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி மக்கள் பிரதிநிதிகளுக்கு போதியளவு சம்பளம் கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வழங்கப்படும் வசதிகளும் கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்;

(iv) போற்றத்தக்க விதத்தில் மக்கள் சேவையினை வழங்குவதற்கு குறித்த வசதிகளும் கொடுப்பனவுகளும் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2787/ '12

2\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) திரு. சரத் பொன்சேகா எப்போது விடுதலை செய்யப்பட்டார் என்பதை இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மன்னிப்பு நிபந்தனையுடனா அல்லது நிபந்தனையின்றியா வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) திரு. சரத் பொன்சேகாவின் ஓய்வூதிய உரிமைகள் மற்றும் இராணுவப் பட்டங்கள் மீண்டும் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(iii) அவரை தற்போதும் 'ஜெனரல்' என அழைக்க முடியுமா என்பதையும்;

(iv) திரு. சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஏதாவது வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பதையும்;

(v) சனாதிபதியின் மன்னிப்பு மூலம் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்குகள் வறிதாக்கப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) திரு. சரத் பொன்சேகாவுடன் வேலை செய்தமைக்காக அல்லது அவருக்கு உதவியமைக்காக, தொல்லை கொடுக்கப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்தப்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவ ஆளணியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய அதிகாரிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டனரா அல்லது அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) திரு. சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில்,

(i) பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நபர்கள் யாவர் என்பதையும்;

(ii) அழுத்தங்களைப் பிரயோகித்த நாடுகள் மற்றும் அவை எப்போது பிரயோகிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அரசியல் மற்றும் சமயத் தலைவர்களது இணக்கப்பாடுகள் ஏன் கவனத்திற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3083/ '12

3.

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2002 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தினுள் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்புக்கு சமாந்திரமாக விலை அதிகரித்துள்ள புகைத்தல் பொருட்கள் (சிகரெட்டுகள்) வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறு விலை அதிகரிக்காத சிகரெட் வகைகள் இருப்பின் அவை யாவை என்பதையும்;

(iii) 2012 மார்ச் மாதத்தில் டன்ஹில் வகை சிகரெட்டின் விலை அதிகரித்த அளவு யாதென்பதையும்;

(iv) இதன் விளைவாக சிகரெட் ஒன்றை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கும் புகையிலைக் கம்பனிக்கும் கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் விற்பனை செய்யப்பட்ட மொத்த சிகரெட்டுக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பெறுமானங்களுக்கமைய சிகரெட் விற்பனையின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3379/ '12

4.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வட மத்திய மாகாண சபையினால் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார்கள், வைத்தியசாலை தொழிலாளர்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப் பட்ட பணியாட்டொகுதியினர் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளில் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்கள் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் ஏற்ப எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக வடமத்திய மாகாண சபையினால் மேற்படி மாகாண சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகையைக் கொண்டு வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தின் ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வருடத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளி ஒருவருக்காக வட மத்திய மாகாண சபையினால் செலவிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3654/ '13

5.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகள், நவோத்யா பாடசாலைகள் மற்றும் முதனிலை பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் அமைய ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா;

(iv) ஆமெனில், ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவை;

(v) மேற்படி பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுமெனில் அதை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அம்பாறை மாவட்டத்தில் மேலே இலக்கம் (அ)(i ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் நூலகங்கள், நீர் வசதி மற்றும் துப்பரவேற்பாட்டு (மலசலகூட) வசதிகள் இல்லாத பாடசாலைகள் யாவை என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3708/ '13

6.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை சனாதிபதியவர்களுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள இணைப்புச் செயலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இன்றைய சனாதிபதியவர்களின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள இணைப்புச் செயலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி இணைப்புச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள துறைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு செயலாளரினதும் பெயர், கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் தனித்தனியே யாவையென்பதையும்;

(v) ஒரு இணைப்புச் செயலாளருக்கு செலுத்தப்படும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் பெற்றுக்கொடுக்கப்படும் வசதிகள் யாவை என்பதையும்;

(vi) இதற்கமைய இணைப்புச் செயலாளர்களுக்காக கடந்த 3 வருடங்களில் ஏற்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(vii) மேற்படி செலவினத்துக்கு ஒப்பீட்டளவில் போதியளவு கடமைப் பொறுப்பொன்று இச் செயலாளர்களினால் ஆற்றப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4263/ '13

7.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எஹலியகொட, தெஹியோவிட்ட வீதியில் (பனாவல வீதி) அமைந்துள்ள மாகாண சபை உறுப்பினர் திரு. சிறிபால கிரிஎல்லவுக்கு உரித்தான "சிறிலக் வர்த்தக நிலையம்" எனும் கட்டடத்தின் ஒரு பகுதி, வீதியை விஸ்தரிக்கும் அவசியத்தைக் குறிப்பிட்டு 2013.06.17 ஆம் திகதி உடைக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கட்டடத்தை உடைத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை உடைப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அதிகாரங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடம் உடைக்கப்பட்டமை தொடர்பாக 2013.06.17 ஆம் திகதி திரு. சிறிபால கிரிஎல்ல எஹலியகொட பொலிசில் செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4408/ '13

8.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச மற்றும் தொண்டர் அமைப்புக்கள் ஊடாக நிர்வகிக்கப்படும் சிறுவர் இல்லங்களில் வதியும் பிள்ளைகளை மேற்படி சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேற்றி சமூகமயமாக்கலுக்குட்படுத்தும் வயதெல்லை யாதென்பதையும்;

(ii) மேற்படி வயதெல்லையை அடையும் வரை சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களுக்கு கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேற்றப்படும் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இவர்கள் பெற்றுள்ள கல்வித் தகைமைகளின் அடிப்படையில் ஏதேனும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4411/ '13

9.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் மூலம் சுவீகரிக்கப்பட்ட இலங்கை எனர்ஜி தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான சிறிய நீர் மின்சக்தி உற்பத்திக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் தற்போது நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அக்கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) இற்றைவரை வேலைகள் ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்களை அமுலாக்குவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4437/ '13

10.

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஞாயிற்றுக் கிழமைகளிலும், போயா தினங்களிலும் தனியார் போதனை வகுப்புக்களை நடாத்துதல் தடை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தடை அமுலிலுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தடை அமுலிலுள்ள தனியார் போதனை வகுப்புக்கள் ஏற்புடையதாகின்ற மாணவர்களின் வயதெல்லைகள் யாவை என்பதையும்;

(iv) இது தொடர்பாக மத்திய அரசாங்கம் பின்பற்றுகின்ற நடைமுறை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2565/ '12

11.

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) சுற்றுலா நகரமான அளுத்கம நகரில் விரிவாக்கப்பட்ட வீதி முறைமைக்கு ஏற்றவாறு முறைசார்ந்த விதத்தில் அமைக்கப்படாதுள்ள வடிகால் தொகுதியில் கழிவுகள் தேங்கி இடையூறாக இருப்பதே நகரில் துர்நாற்றம் வீசுவதற்கு காரணமாக அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிலைமையை சீராக்குவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) அளுத்கம நகரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பேரூந்து தரிப்பிடத்தின் கடைகள் இதுவரை வர்த்தகர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3156/ '12

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

(ii) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்களான திருமதி இந்திராணி சுகததாச மற்றும் திரு. திலக் கருணாரத்ன ஆகியோரினால் வெளிப்படுத்தப்பட்டவாறு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பங்குச் சந்தையினைச் சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் தொடர்பில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் நடைபெற்ற அறிக்கை செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட சில மாபியா நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட விசாரணையின் தற்போதைய நிலையினையும்;

(iii) இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iv) நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒத்திணங்கிய சம்பவங்களையும்;

(v) தீர்வுக்கு வருவதற்கு ஏற்பட்ட செலவினையும்;

(vi) இவ்வாறான தீர்வுகளுக்கு வருவதற்கு அரசியல் அழுத்தங்கள் இருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3293/ '12

13.

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு நேரிடுகின்ற இடையூறுகள் குறித்து ஆராய்வதற்காக 2008 ஜூன் மாதத்தில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப அறை இலக்கம் 2/08 இல் இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் அமைச்சர்களின் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி உபகுழு இரத்துச் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி உபகுழுவின் நடவடிக்கைகளை நடத்திச் சென்ற கட்டிடத்திற்கான வாடகை, தொலைபேசிக் கட்டணப் பட்டியல், மின்சாரக் கட்டணப் பட்டியல் என்பவற்றுக்காக செலவழிக்கப்பட்ட பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட செலவுகளுக்கு மேலதிகமாக ஏற்கப்பட்ட ஏனைய செலவுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிவாரா?

(ஈ) (i) மேற்படி செலவுகளை மேற்கொண்ட அமைச்சுக்கள் மற்றும் அவற்றுக்கு உரிய செலவுத் தலைப்புக்கள் யாவை;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லையெனின், இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3383/ ' 12

14.

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கையில் உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்ற இயற்கைக் காட்டு யானை பாதுகாப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிலையத்தினதும்,

(i) பெயர், அமைவிடம், பரப்பளவு மற்றும் நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) எதிர்பார்க்கப்படும் பணிகள் யாவை;

(iii) நிர்மாணிக்கப்படும் மின்சார வேலிகளின் நீளம் மற்றும் அவற்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்க எதிர்பார்க்கப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மின்சார வேலிகளை பராமரிப்பதற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவு;

(v) ஒரு நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஹொரவ்பத்தான காட்டு யானைகள் பாதுகாப்பு நிலையத்தில்,

(i) நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாவிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) நிர்மாணிக்கப்படும் புற்தரைகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iii) யானைகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் எவ்வளவு;

(iv) புனர்வாழ்வளிக்கப்படும் அந்த யானைகள் விடுவிக்கப்படும் பிரதேசங்கள் யாவை;

(v) புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்படும் யானைகள் தொடர்பாக பின்னாய்வு மேற்கொள்ளப்படுமாயின், அது எவ்விதத்தில் மேற்கொள்ளப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3943/ '13

15.

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 முதல் 2013 வரையான ஆண்டுக் காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும்,

(i) உள்ளடக்கியுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனவா என்பதையும்;

(iv) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை சபா பீடத்தில் வைப்பாரா என்பதையும்;

(v) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) பந்தியின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2011 நவம்பர் 30 ஆம் திகதிய 1734/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறாகன 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) பந்தியின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 நவம்பர் 30 ஆம் திகதிய 1786/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

15.

மொஹான் லால் கிரேரு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

16.

விக்டர் அந்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

பண்டு பண்டாரநாயக்க ஹெல ஜன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி பீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

மிஸ்டிகல் ரோஸ் சர்வதேச நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

ஸ்ரீ லங்கா ஹிரா பௌன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

இலங்கை எழுத்தாளர்கள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

தாம்பே, மீகொட போதிவர்தனாராம ஸ்ரீ மதுரசாம பிரிவென் விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

இலங்கை ஒளிப்படவியலாளர் சங்கங்களின் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.